# கோலம் போடுவது எதற்காக?

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

**கோ**லம் என்பது அலங்காரத்திற்காகப் போடப் படுவதில்லை. இது ஒரு விதமான உருவம். படைப்புகள் எல்லாமே ஒருவிதமான உருவங்கள்தான். அடிப்படை யான உருவம் முக்கோண வடிவம். இதை யந்திரம் என்றும் சொல்வோம். யந்திரம் என்பது உருவங்கள் சரியான முறையில் ஒன்றிணையும்போது ஏற்படுவது. யந்திரம் ஒரு குறிப்பிட்ட விதத்தில் செயல்படும். ஆங்கிலத்தில் மெஷின் என்று சொல்லப் படும் யந்திரமும் பல விதமான உருவங்கள் முறைப்படி ஒன்றிணைந் ததுதான்.

இந்தப் பிரபஞ்சம் கூட. சூரியன், சந்திரன், பூமி என்று பலவிதமான உருவங்கள் ஒன்றிணைந்து ஒரு மகத்தான, பிரம்மாண்டமான யந்திரமாக இருக்கிறது. இந்த பிரபஞ்சத்தை பார்த்துவிட்டுத் தான் நாம் பல சிறிய அளவிலான யந்திரங்களை உருவாக்கி உள்ளோம். இந்த சூரியன், சந்திரன், இந்த பூமி இவற்றைப் பார்த்துத்தான் நாம் கடிகாரங் களையே உருவாக்கினோம்.

நம் உடல் கூட ஒரு யந்திரம் தான். இந்த உடல் என்னும் யந்திரத்தை நுட்பமாக கவனித்தாலே ஒவ்வொரு காலத்திலும், நேரத்திலும், பூமியின் சக்தி சூழ்நிலை எவ்வாறு வேறுபடு கிறது என்பதை உணர முடியும். இந்த மாற்றத் தைக் கவனத்தில் வைத்து குறிப்பிட்ட பலன்கள் பெற குறிப்பிட்ட விதத்திலான யந்திரங் களை உருவாக்கும் பழக்கம் நம் கலாச்சாரத்தில் இருக்கிறது.



நமது கலாச்சாரத்தைப் பொருத்த வரையில் கோலத்தையும் ஒரு குறிப் பிட்ட வகையான யந்திரமாகத்தான் உருவாக்கினர். ஆனால் இப்போது இதை ஒரு அலங்கார உருவமாகப் பார்க்கின்றனர். பல நேரங்களில் தகர உருளையில் கோலப்பொடியை போட்டு உருட்டுகின்றனர். அதி லிருந்து ஏதோ ஒரு வடிவம் வருகிறது. ஆனால் கோலம் போடுவதற்கென்று ஒரு முறை இருக்கிறது.

புத்த மடாலயங்களில் ஒரு கோலத்தை 10 பேர் காலையிலிருந்து மாலை வரை போடுவார்கள். அப்படியும் அதை முடிக்க கிட்டத் தட்ட 3,4 மாதங்கள் எடுத்துக் கொள்வார்கள். அவ்வளவு விரிவான ஏற்பாடுகளோடு அந்தக் கோலத்தைப் போடுவார்கள். ஒரு கோலம் - வடிவத்தைப் பொறுத்தும், அதில் பயன்படுத்தும் பொருட்களைப் பொறுத்தும் வெவ்வேறு விதங்களில் செயல்படும். தாந்திரீக முறைப்படி பூஜை செய்யும் போது பெரிய கோலங்கள் இடுவார்கள். இதனை நீங்கள் கேரளாவில் பார்க்க முடியும்.



எனக்கு 17 வயது இருக்கும். அப்போது இந்த சம்பவம் நிகழ்ந்தது. நான் அப்போது மைசூரில் இருந்தேன். பேயைப் பார்க்க வேண்டும் என்கிற ஆர்வம் எனக்குள். இத்தேடுதலில் பல நாட்கள் இரவு பகல் பாராமல் பேயைப் பார்ப்பதற்காக பல இடங்களுக்குச் செல்வேன். இது மாதிரி பேய் தேடுதலில் நான் அலைந்து கொண் டிருந்த சமயத்தில் தான் ஒருத்தர் எனக்கு அறிமுகமானார். தன் வீட்டில் நிறைய பாட்டில்களைக் காண்பித்து அந்த பாட்டில்களில் பேய்களை பிடித்து வைத்திருப்பதாகக் கூறி னார். அந்த பாட்டில்கள் பார்ப்ப தற்கு காலியாகத்தான் இருந்தன. ஆனால் அவரோ அதில் பேய் இருக்கிறது என்று கூறினார்.

நானும் தினமும் அவருடைய வீட்டிற்கு செல்வேன், எப்படி யாவது ஒரு பாட்டிலாவது தெரி யாமல் எடுத்து வந்து விடலாம் என்று திட்டமிட்டுத்தான் செல் வேன். ஆனால் அவரோ என்னை அந்த பாட்டில்களின் பக்கத்தி லேயே நெருங்க விடமாட்டார். அதன் பின் ஒரு நாள் புதிது புதிதாய் ஏதோ ஏற்பாடெல்லாம் நடந்து கொண்டிருந்தது. அங்கு ஒரு கோலம் போட்டார்கள். அந்த கோலத்தின் 5 மூலைகளில் 5 முட்டைகளை வைத்தார்கள். ஏதோ செய்துவிட்டு கையைத் தட்டினார். அந்த முட்டைகள் அனைத்தும் உடைந்து சிதறின! நான் அது வரையில் அப்படி ஒரு நிகழ்ச்சியைப் பார்த்ததே இல்லை. எனவே அப்போது அது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இந்தக் கோலம் இல்லையென்றால் அந்த மனிதர் கை தட்டிய விதத்திற்கு அந்த முட்டைகளை அவரால் உடைத்திருக்க முடியாது. அந்த கோலம் இதற்கு உகந்த ஒரு சூழ்நிலையை உருவாக்கியது.

எனவே பலவிதமான பலன்களுக்குப் பலவிதமான கோலங்களைப் போட முடியும். அதில் ஒன்று மாட்டு சாணம் தெளித்து அதன் மேல் கோலம் இடுவது. அதற்கு குறிப்பிட்ட விதமான சக்தி இருக்கிறது.

மார்கழியில் என்ன விசேஷம் என்றால் இந்த மாதத்தில்தான் சூரியன் தட்சிணாயணத்திலிருந்து உத்தராயணத்திற்கு நகர்கிறான். அதாவது டிசம்பர் முதல் மே வரை சூரியன்

தெற்கிலிருந்து வடக்கிற்கும் ஜூன் மாதத்திலிருந்து நவம்பர் வரை வடக்கில் இருந்து தெற்கு நோக்கியும் நகர்கிறான். சூரியனின் ஓட்டத்தில் இந்த மாற்றம் நிகழும்போது, பூமியினுடைய சக்தி சூழ்நிலையிலும் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. குறிப்பாக பூமத்திய ரேகையிலிருந்து 32 டிகிரி அட்சரேகையில் (Latitude) பெரிய மாற்றங்கள் நடைபெறுகின்றன. தமிழ் நாடு, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்கள் இந்தப் பரப்பில் தான் உள்ளன. இந்த மாற்றங்கள் நிகழ்கின்ற போது அதனை பயன்படுத்திக் கொள்ள பல கருவிகள் இருக்கின்றன. யோக முறைகளிலும் பலவிதமான பயிற்சிகள் இருக்கின்றன.



நீங்கள் மஹாபாரதக் கதை கேட்டிருப்பீர்கள். அதில் பீஷ்மர், தன் உடலில் அத்தனை அம்புகள் ஏறியிருந்தாலும் தன் உயிரை உத்தராயணத்தில்தான் துறக்க வேண்டும் என்று விடாமல் பிடித்து வைத்திருந்தார். உத்தராயணத்தில் உடலை நீத்தால் முக்தி கிடைக்கும் என்னும் நம்பிக்கையே இதற்குக் காரணம். எனவே முக்தி நோக்கிலுள்ள மக்களுக்கு மார்கழியில் தொடங்கும் உத்தராயணம் என்பது முக்கியமாக இருக்கிறது.

எனவே சூரியனின் போக்கில் மாற்றங்கள் நிகழும்போதும், பூமிக்கும் சூரியனுக்குமான தொடர்பில் மாற்றங்கள் ஏற்படும் போதும், தேவையான அறிவு, ஞானம் இருந்தால், அப்போது ஏற்படும் சக்தி சூழ்நிலையை, நமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அதில் ஒன்றுதான் கோலம் இடுவதும். குறிப்பிட்ட விதத்தில் கோலம் இடுவதன் மூலம் அந்த சக்தியை நம் வீட்டிற்குள் கிரகித்துக் கொள்ள முடியும். இதனை நீங்கள் விஞ்ஞானப் பூர்வமாகச் செய்தீர்கள் என்றால் இதனால் உங்களுக்குக் கட்டாயமாக பலன் கிடைக்கும். உங்களுக்கும், உங்கள் வீட்டில் இருப்பவர்களுக்கும், உங்கள் வீட்டு சூழ்நிலைக்கும் நன்மையைக் கொண்டு வர முடியும். இந்த மாதத்தில் அதற்கான வாய்ப்பு மிகத் தீவிரமாக உள்ளது.

- நன்றி : காட்டுப்பூ